2026 செப்டம்பர் 20

## ஆண்டின் 25-ஆம் ஞாயிறு

ஏசாயா 55:6–9; பிலிப்பியர் 1:20c–24, 27a; மத் 20:1–16a

### முன்னுரை

ஒருமுறை ஆசிரியர் ஒருவர் தன் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பலூனைக் கொடுத்து, அதில் அவரவர் பெயரை எழுதச் சொன்னார். பிறகு, எல்லா பலூன்களையும் மற்றொரு அறையில் போட்டார். "யார் மிக விரைவாகத் தனது பெயருள்ள பலூனைக் கண்டுபிடிக்கிறீர்களோ, அவரே வெற்றியாளர்" என்று கூறி மாணவர்களை அந்த அறைக்குள் அனுப்பினார். சில நிமிடங்களிலேயே அந்த அறை முழுவதும் தள்ளுமுள்ளு, கூச்சல், குழப்பம் மற்றும் குழப்பமும் ஏமாற்றமுமே எஞ்சியது.

உடனே ஆசிரியர் அந்த நிபந்தனையை மாற்றினார்: "இப்போது நீங்கள் ஏதேனும் ஒரு பலூனை எடுங்கள்; அதில் யாருடைய பெயர் இருக்கிறதோ அவரிடம் அதைக் கொடுத்துவிடுங்கள்." அடுத்த சில நிமிடங்களிலேயே, ஒவ்வொரு மாணவரின் கையிலும் அவரவர் பலூன்கள் இருந்தன. ஆசிரியர் புன்னகையோடு சொன்னார்: "நாம் சுயநலத்தோடு நமது சுயமான லாபத்தை மட்டுமே தேடும்போது குழப்பமே மிஞ்சும். ஆனால், மற்றவர்களின் நலனைத் தேடும்போது, அனைவருக்கும் தேவையானவை போய்ச்சேரும்."

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இன்றைய நற்செய்தியானது எப்போதும் நம்மை மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்க்கும், கணக்குப்

பார்க்கும் மனித இயல்பை உலுக்கிப் பார்க்கிறது.

திராட்சைத் தோட்டத் தொழிலாளர்கள், மற்றவர்களுக்கு என்ன கிடைக்கிறது என்பதைக் கணக்கிடத் தொடங்கிய கணமே, தங்கள் மகிழ்ச்சியை இழந்தார்கள். ஆனால் இறைவனின் அன்பு நம்முடைய கணக்கீடுகளுக்கு உட்பட்டதல்ல. அவரது வழிகள் நம் வழிகளை விட உயர்ந்தவை; அவரது இதயம் நம் இதயத்தை விடப் பரந்தது.

தூய பவுல் அடிகளார் இந்த உண்மையை ஆழமாக உணர்ந்திருந்தார். சிறைச்சாலையில், மரணத்தின் விளிம்பில் இருந்தபோதும் அவரால் உறுதியாகச் சொல்ல முடிந்தது: "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே." கிறிஸ்து அவரது வாழ்வின் மையமானபோது, பயம் மறைந்து விடுதலை பிறந்தது; ஒப்பீடு மறைந்து நன்றி உணர்வு வளர்ந்தது.

இன்று இறைவனின் பிரசன்னத்தில் கூடிவந்திருக்கும் நாம், பல நேரங்களில் பொறாமை, மனக்கசப்பு, சுயநலம் மற்றும் தேவையற்ற ஒப்பீடுகளால் அமைதியை இழந்து நிற்பதை உணர்வோம். இறைவனின் இரக்கத்திற்காகவும், அவர் மற்றவர்களுக்குச் செய்யும் நன்மைகளைக் கண்டு மகிழும் நல்மனத்திற்காகவும் இன்றைய திருப்பலியில் சிறப்பாக ஜெபிப்போம்.

**மறையுரை**

“இறைவனின் வழிகள் நம் கணக்கீடுகளுக்கு அப்பாற்பட்டவை”

ஒரு நபர் தன் தாத்தாவின் கடைசி நிமிடங்களை நினைவுகூர்ந்தார். அந்தத் தாத்தா தன் வாழ்நாள் முழுவதும் மிகப்பெரிய தொழிலதிபராக இருந்தவர்; வீடுகள் கட்டினார், நிலங்கள் வாங்கினார், குடும்பத்திற்காக ஓயாது உழைத்தார். அவர் படுக்கையில் கிடந்தபோது, பேரப்பிள்ளைகளில் ஒருவன், "தாத்தா, நீங்கள் போகும்போது கூடவே எதை எடுத்துக்கொண்டு போகிறீர்கள்?" என்று அறியாமல் கேட்டான். தாத்தா மெலிதாகப் புன்னகைத்து, தன் நடுங்கும் கையை உயர்த்தி, “நான் மற்றவர்களுக்குக் கொடுத்ததையும்… என் வாழ்க்கையைக் கொடுத்த இறைவனையும் மட்டுமே எடுத்துச் செல்கிறேன்” என்றார்.

இந்த எளிய உண்மை இன்றைய இறைவார்த்தையின் மையத்தைத்தொடுகிறது. நாம் எவ்வளவைச் சாதித்தோம், எவ்வளவு சேர்த்தோம், நமக்கு என்ன தகுதி இருக்கிறது, மற்றவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதைக் கணக்கிடுவதிலேயே நம் வாழ்க்கை கழிகிறது. ஆனால், தூய பவுல் அடிகளாரின் வாழ்வு மூலமாகவும், திராட்சைத் தோட்டத் தொழிலாளர்களின் உவமை மூலமாகவும் இறைவன் நம்மைக் கணக்கு வழக்கு பார்க்கும் எண்ணத்திலிருந்து அருள் சார்ந்த வாழ்விற்கு அழைப்பு விடுக்கின்றார்.

இரண்டாம் வாசகத்தில  தூய பவுல் அடிகளார் சிறையிலிருந்து எழுதுகிறார்.

மரணம் தன்னை நெருங்குவதை அறிந்தும், அவர் மகிழ்ச்சியோடு சொல்கிறார்: "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே; இறந்தால் அது எனக்கு

ஆதாயம்." இது வாழ்க்கையை வெறுத்த ஒரு மனிதனின் வார்த்தைகள் அல்ல.

பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம் முழுவதும் மகிழ்ச்சி பொங்குவதைக் காணலாம். பவுல் அடிகளார் வாழ்விலிருந்து தப்பிக்க நினைக்கவில்லை; மாறாக, அவர் கிறிஸ்துவை அத்தனை ஆழமாக நேசித்தார்.

பொதுவாக மனிதர்கள் மரணத்தை இழப்பாகவே பார்க்கிறார்கள். ஏனெனில் மரணத்தின் போது நாம் சேர்த்த சொத்து, பதவி, தகுதி, அன்பான மனிதர்கள் அனைத்தையும் விட்டுச் செல்ல வேண்டும். “நாம் கட்டிக்காத்த எதுவும் நம்மோடு வரப்போவதில்லை.” ஆனால் பவுல் அடிகளார் "இறப்பது எனக்கு ஆதாயம்" என்கிறார். ஏன்? ஏனெனில் வாழ்வின் இரகசியத்தை அவர் கண்டுகொண்டார்: ஏனெனில் "வாழ்வது கிறிஸ்துவே."

ஆப்பிரிக்காவில் பல ஆண்டுகள் தொண்டாற்றிய ஒரு மிஷனரி குருவிடம், அவரது முதிர்ந்த வயதில், "தந்தையே, உங்களுக்கு மரணத்தைக் கண்டு பயமாக இல்லையா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "நான் ஏன் பயப்பட வேண்டும்? என் வாழ்நாள் முழுவதுமே நான் ஒருவரை நோக்கித்தானே நடந்துகொண்டிருந்தேன்!" என்றார்.

பவுல் அடிகளாராரின் மனநிலையும் இதுவே. மரணம் அவருக்கு ஒரு அழிவு அல்ல; அது தான் நேசித்த கிறிஸ்துவை நேரில் சந்திக்கும் இறுதி நிகழ்வு.

இன்றைய நற்செய்தி நம்மை மற்றொரு கோணத்திற்கு அழைத்துச் செல்கிறது. இயேசு ஒரு உவமையைக் கூறுகிறார்: சிலர் விடியற்காலையிலேயே வேலைக்குச் செல்கிறார்கள். சிலர் மாலை ஐந்து மணிக்குச்

செல்கிறார்கள். ஆனால் நாளின் இறுதியில், வேளையாட்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான கூலியைக் கொடுக்கிறார்.

உடனே நமக்குள்ளும் ஒரு கேள்வி எழுகிறது: "இது நியாயமே இல்லை!" நாள் முழுவதும் உழைத்த தொழிலாளர்களின் பக்கமே நாம் நிற்க நினைக்கிறோம். ஏனெனில், அதிக உழைப்புக்கு அதிக ஊதியம் என்பதே நம் சமூகத்தின் விதி.

ஆனால் இயேசு இங்குப் பொருளாதார பாடம் நடத்தவில்லை; அவர் கடவுளின் பரந்த இதயத்தை நமக்குக் காட்டுகிறார்.

இயேசுவின் காலத்தில், சந்தைவெளியில் நின்ற தொழிலாளர்கள் சோம்பேறிகள் அல்ல. அன்றைய தினம் தங்கள் குடும்பத்திற்கு உணவளிக்க யாராவது வேலை தரமாட்டார்களா என்று ஏங்கி நின்ற ஏழைகள். அன்றைய கூலியான ஒரு 'தெனாரியம் “ என்பது வெறும் பணம் அல்ல; அது அந்த குடும்பத்தின் அன்றைய வாழ்வாதாரம்.

எனவே, தோட்ட உரிமையாளர் ஒரு மணி நேரம் வேலை செய்தவருக்கும் முழு கூலியைக் கொடுக்கும்போது, அவர் முதலில் வந்தவர்களுக்குத் துரோகம் செய்யவில்லை; அவர்களுக்குப் பேசப்பட்ட கூலியைக் கொடுத்துவிட்டார். மாறாக, பின்னால் வந்தவர்களின் வறுமையைக் கண்டு அவர் தாராள மனதோடு நடந்துகொள்கிறார்.

அவர் கணக்குப் பார்க்கவில்லை; இரக்கம் காட்டுகிறார்.

இதற்கு ஒரு நவீன உதாரணம் உண்டு.

ஐரோப்பிய நாடு ஒன்றில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது, ஒரு ரொட்டிச் கடை உரிமையாளர், மாலையில் கடை மூடும்

நேரத்தில் வேலை இல்லாத சிலர் ரொட்டிக்காகக் காத்திருப்பதை கண்டார் . அவர் மீதமான ரொட்டிகளைக் குப்பையில் போடுவதற்குப் பதிலாக, பைகளில் அடைத்துச் பின் கதவருகே வைத்தார். நண்பர் ஒருவர், "ஏன் இவ்வளவு ரொட்டிகளை இலவசமாகக் கொடுக்கிறாய்?" என்று கேட்டதற்கு, அவர், "ஏனெனில் பசி என்பது நியாய அநியாயங்களுக்காகக் காத்திருப்பதில்லை" என்றார்.

இறைவனின் அன்பும் இதைப் போன்றதே.

இறைவனின் தாராள குணம் நமது கணக்கீடுகளுக்குள் அடங்காததால் நம்மை சில நேரங்களில் குழப்புகிறது.

இறைவாக்கினர் எசாயா கூறுவது போல, "என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல; என் வழிகள் உங்கள் வழிகள் அல்ல." கடவுள் தகுதியின் அடிப்படையில் அன்பு செய்வதில்லை; தம் இதயத்தின் எல்லையற்ற அருளினாலேயே அன்பு செய்கிறார்.

அதனால்தான் இயேசுவின் உவமைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

தந்தையானவர் வீட்டிற்குத் திரும்பிய ஆடம்பர மகனுக்காக விருந்து படைக்கிறார்.

ஆயன் தொண்ணூற்றொன்பது ஆடுகளை விட்டுவிட்டு ஒரு ஆட்டைத் தேடிச் செல்கிறார்.

திராட்சைத் தோட்ட உரிமையாளர் பின்னால வந்தவருக்கும் முழு கூலியைத் தருகிறார்.

நாமும் ஏதோ ஒரு வகையில் அந்தப் 'பிந்தி வந்த தொழிலாளர்கள்'தான்.

பலர் பல ஆண்டுகள் இறைவனை விட்டு விலகி, வாழ்வின் பிற்பகுதியில் திரும்புகிறார்கள். சிலர் காயங்களோடும், தவறுகளோடும், ஏமாற்றங்களோடும் வருகிறார்கள்.

சிறையில் மனம் மாறிய ஒரு கைதியின் கதை உண்டு. குற்றங்களிலேயே வாழ்ந்த அவர், சிறைச்சாலையின் குருவின் வழிகாட்டலால் கிறிஸ்துவைக் கண்டுகொண்டார். தண்டனைக்குச் சற்று முன் அவர் சொன்னார்: "நான் மிகத் தாமதமாகவே இறைவனிடம் வந்தேன். ஆனால், அவர் என் வாழ்நாள் முழுதும் எனக்காகக் காத்திருந்தது போலவே என்னை ஏற்றுக்கொண்டார்."

இதுவே இறை அருளின் பேரழகு.

நாம் நம்மை நாள் முழுவதும் உழைத்த தொழிலாளர்களாக மட்டுமே நினைத்தால், மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பொறாமையும் மனக்கசப்பும் அடைவோம். ஆனால், நாமும் தகுதியற்றவர்கள், இறை இரக்கத்தால் மட்டுமே வாழ்கிறோம் என்பதை உணர்ந்தால், இந்த நற்செய்தி நமக்கு மிகப்பெரிய ஆறுதலாக மாறும்.

ஒப்பிடுதல் மகிழ்ச்சியை அழிக்கிறது; நன்றி உணர்வு அதை மீட்டெடுக்கிறது.

குடும்பங்களில், பணிபுரியும் இடங்களில், ஏன் திருச்சபையில்கூட இது நடக்கிறது. ஒருவருக்கு அங்கீகாரம் கிடைக்கும்போது மற்றொருவர் ஏங்குகிறார். உடனே நம் மனம், "அவருக்கு ஏன் அதிகம் கிடைத்தது?" என்று கணக்குப் பார்க்கத் தொடங்குகிறது.

ஆனால் நற்செய்தி நம்மிடம் கேட்கிறது: "உன் சகோதரன் நன்மையைப் பெற்றதற்காக நீ ஏன் மகிழ்ச்சியடையக் கூடாது?"

பொறாமை என்பது கலங்கிய நீரைப் போன்றது. அது இதயத்தின் அமைதியைக் கெடுத்து, இறைவனையோ, பிறரையோ, ஏன் நம்மையோ கூடச் சரியாகப் பார்க்க விடாமல் செய்துவிடும்.

அமைதி பெற நாம் ஒப்பிடுவதை விட்டுவிட்டு, நன்றி கூறப் பழக வேண்டும்.

பவுல் அடிகளாரால் மரணத்தைக் கூட அமைதியோடு எதிர்கொள்ள முடிந்தது, ஏனெனில் அவரது வாழ்க்கை சொத்துக்களையோ, தகுதிகளையோ மையமாகக் கொண்டிருக்கவில்லை. கிறிஸ்துவே அவரது பொக்கிஷமாக இருந்தார். கிறிஸ்து நம் வாழ்வின் மையமாக மாறும்போது:

குடும்பம் இறைவனின் கொடையாக மாறுகிறது.

பணி என்பது சேவையாக மாறுகிறது.

பணம் ஒரு கருவியாக மட்டுமே இருக்கிறது.

மரணம் தன் பயத்தை இழக்கிறது.

ஒரு செவிலியர், தான் பார்த்த இரண்டு நோயாளிகளின் இறுதி நிமிடங்களைப் பகிர்ந்துகொண்டார். ஒருவர் செல்வந்தர்; கடைசி வரை தன் வங்கி கணக்குகளையும் சொத்துக்களையுமே கவலையோடு கேட்டுக்கொண்டிருந்தார். மற்றவர் ஒரு எளிய பெண்மணி; இறைவனைப் போற்றி ஜெபித்துக்கொண்டிருந்தார். இறப்பதற்கு முன் அவர் புன்னகையோடு, "நான் என் வீட்டிற்குச் செல்கிறேன்" என்றார்.

இருவரும் இந்த உலகை விட்டுப் பிரிந்தார்கள். ஆனால் ஒருவர் மட்டுமே உண்மையான விடுதலையோடு சென்றார்.

இன்றைய இறைவார்த்தை நம்மிடம் கேட்கிறது:

என் வாழ்வின் மையம் எது? நான் எதற்காக வாழ்கிறேன்? மற்றவர்களுக்கு இறைவன் செய்யும் நன்மைகளைக் கண்டு என்னால் மகிழ்ச்சியடைய முடிகிறதா?

தூய பவுல் அடிகளாரைப் போல "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே" என்று நம்மால் சொல்ல முடிந்தால், நற்செய்தி தரும் உண்மையான விடுதலையை நாம் அடைவோம். அப்பொழுது பொறாமையும் பயமும் நம்மை ஆட்டிப்படைக்காது. இறைவனின் அளவற்ற அருளை நாம் நம்பத் தொடங்குவோம்.

நம்முடைய இறுதி நேரமும் வரும்போது, நாமும் அமைதியோடு சொல்ல முடியும்: "நான் வெற்றுக் கையோடு போகவில்லை; கிறிஸ்துவின் அளவற்ற இரக்கத்தைக் கரங்களில் ஏந்தி எனக்கு வாக்களிக்கப்பட்ட தந்தையின் வீட்டிற்குச் செல்கிறேன்." ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia

and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai